# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 / 28440938 பேக்ஸ்: 28443601 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
மு.அன்பரசு

பொதுச் செயலாளர்
ஆ.செல்வம்

மாநில துணைத் தலைவர்கள்
மொ.ஞானத்தம்பி
ஏ.பெரியசாமி
இரா.மங்களபாண்டியன்
என்.வெங்கடேசன்
மு.சீனிவாசன்
கோ.பழனியம்மாள்

மாநிலப் பொருளாளர்
மு.பாஸ்கரன்

மாநிலச் செயலாளர்கள்
இரா.ந.நம்பிராஜன்
சி.எஸ்.கிறிஸ்டோபர்
சி.பரமேஸ்வரி
உ.சண்முகம்
தெ.வாசுகி


ஊடகச் செய்தி எண். 11/2021 — நாள்.07.09.2021

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு. அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும்

**ஊடகச் செய்தி**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு**

**வரவேற்பும் - எதிர்பார்ப்பும்**

தமிழ்நாட்டின் சட்டமன்ற கூட்டத்தொடரில் இன்று 07.09.2021 மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர், ஆசிரியர்கள் கோரிக்கைகள் தொடர்பான 13 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதற்கு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் வரவேற்று நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது அரசு ஊழியர்களின் உற்ற நண்பனாக அவர்களுக்கு உரிமைகளையும், சலுகைகளையும் வழங்கும் தோழனாக என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளது அரசு ஊழியர்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சியில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கை தொடர்பாக பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்திய போதும் சங்க நிர்வாகிகளை அழைத்துக் கூட பேச மறுத்த முன்னாள் அதிமுக அரசாங்கத்தினை அப்புறப்படுத்திடவும்,

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

அரசு ஊழியர்கள் நலன் சார்ந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்ததால் திமுக அரசு அமைய அரசு ஊழியர்களும் ஒரு காரணம் என்பதை இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்புகளின் மூலம் ஊர்ஜிதமாகிறது.

அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு 01.01.2022 முதல் அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் ஆகியோரின் ஓய்வு பெறும் வயது 58 லிருந்து 60 ஆக உயர்த்தப்படும், அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் கூடுதல் கல்வித் தகுதிகள் பெற்றால் உயர்கல்வி தகுதிக்கான ஊக்கத் தொகை ஒன்றிய அரசின் வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் வழங்கப்படும். அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்படும், ஓய்வு பெறும் நாளில் அரசு ஊழியர்கள் தற்காலிக பணிநீக்கத்தில் வைக்கப்படும் நடைமுறை தவிர்க்கப்படும், 2016,2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முந்தைய அரசிற்கு எதிராக அரசு ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டக் காலங்கள், தற்காலிக பணிநீக்கக் காலங்கள் பணிக்காலமாக வரன்முறைப்படுத்தப்படும், வேலை நிறுத்தப்போராட்டத்தின் போது பணியிடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் கலந்தாலோய்வில் முன்னுரிமை அடிப்படையில் மீண்டும் அதே பணியிடத்தில் பணியமர்வு செய்யப்படுவார்கள், அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் கைவிடப்படும், பதவி உயர்வு பாதிக்கப்பட்டிருந்தால் சரிசெய்யப்படும், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் சரிசெய்யப்படும், அரசு ஊழியர்களுக்கான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களின் மகன்கள்,மகள்கள் ஆகியோரை வயது வரம்பினை கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்படும், இதற்கென தனி தொலைபேசி உதவி மையம் (HELP DESK) அமைக்கப்படும், மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் கொரானா சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தொகையான 10 லட்சம் ரூபாயை விடவும் கூடுதலாக செலவிடப்பட்ட தொகை அரசு நிதி உதவியின் கீழ் அமைக்கப்படும், IFHRMS பணிகளை எளிதாக மேற்கொள்ளும் வகையில் ஊழியர்களுக்கு உரிய பயிற்சி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

அளிக்கப்படும், புதிதாக பணியில் சேர்பவர்கள் பதவி உயர்வில் செல்ல உள்ளவர்கள் ஆகியோருக்கு மாவட்டத்திலேயே பயிற்சிகள் வழங்கப்படும் அவர்களின் தகுதிகாண் பருவம் முடித்தால் பதவி உயர்வு பெறுவது உறுதி செய்யப்படும்,அரசுப் பள்ளிகளில் மாணவர் விகிதாச்சார தேவைக்கேற்ப ஆசிரியர் பணிநியமனம் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்புகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளன என்ற பார்வையில் தமிழக அரசு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான அரசாகவும், அதன் மூலம் சிறப்பானதொரு சேவை மக்களுக்கு கிடைக்கும் என்ற அடிப்படையில் மக்களுக்கான அரசாகவும் இருக்கும் என்ற நம்பிக்கை துளிர்க்கிறது.

ஆனாலும் கூட தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி புதிய ஓய்வூதிய திட்டத்தினை ரத்து செய்து பழைய பயனளிப்பு ஓய்வூதியம வழங்கப்படும் என்ற அறிவிப்பு இல்லாததும், ஒன்றிய அரசு அறிவித்துள்ளபடி 11% அகவிலைப்படி உயர்வினை 1.7.2021 முதல் அறிவிக்காததும், நிறுத்தி வைத்துள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படை பற்றிய அறிவிப்பு இல்லாததும்,அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்வது தொடர்பாக அறிவிப்பு ஏதும் இல்லாததும், 38 ஆண்டு காலமாக தொடர்ந்து போராடிவரும் சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்களின் பிரதான கோரிக்கையான சிறப்பு காலமுறை ஊதியத்திலிருந்து வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குதல் மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் MRB செவிலியர்கள் உள்ளிட்டோருக்கு காலமுறை ஊதியம் வழங்குதல், குறைந்தபட்ச ஓய்வூதியம் 9000 வழங்குதல், சாலைப்பணியாளர்களை கடந்த அதிமுக அரசாங்கம் வன்மத்தோடு பணியிலிருந்து நீக்கியதால் ஏற்பட்ட 41 மாத காலத்தை பணிக்காலமாக வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கை தொடர்பான அறிவிப்பு இல்லாததும்,மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் அரசு ஊழியர்களின் பெற்றோரை இணைத்து அவர்களும் சிகிச்சை பெறும் வகையில் அறிவிப்பு இல்லாததும் ஏமாற்றத்தை அளிக்கிறது. இருந்த போதிலும் திமுக தலைமையிலான அரசு, அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு விடியல் தரும் அரசாக இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெற்று கொண்டிருக்கும் சட்டமன்ற

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


கூட்டத்தொடர் முடியும் முன்பாகவே இது தொடர்பான அறிவிப்புகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் வெளியிடுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளை அழைத்து கோரிக்கைகள் தொடர்பாக பேசி அனைத்து கோரிக்கைகளின் மீதும் உரிய அறிவிப்புகள் வெளியிட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

(மு.அன்பரசு)
மாநிலத் தலைவர்
98401 87508

(ஆ.செல்வம்)
பொதுச் செயலாளர்
94439 30500